ஸ்ரீ:

கானவித்யா ப்ரகாசினி

இனிய தமிழ் மாதப் பத்திரிகை.

தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக்கண்டார் — பாரதி.

மலர் 1. } ஜூலை -1932. { இதழ் 10.

கண்ணம்மா—என் குழந்தை

இராகம் ஆனந்தபைரவி] [தாளம் திச்ர லகு

மெட்டு.

தகிட தகிட தா * தகதிமி
தகிட தகிட தா ****
தகிட தகிட தா—தகதிமி
தகிட தகிட தா ****

சின்னஞ் சிறு கிளியே—கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே!
என்னைக் கலி தீர்த்தே—உலகில்
ஏற்றம் புரியவந்தாய்.

பிள்ளைக் கனியமுதே—கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே!
அள்ளியணைத்திடவே—என்முன்னே
ஆடிவரும் தேனே!

ஓடி வருகையிலே—கண்ணம்மா
உள்ளங் குளிருதடீ
ஆடித்திரிதல் கண்டால்—உன்னைப்போய்
ஆவி தழுவுதடீ

உச்சிதனை முகந்தால்—கருவம்
ஓங்கி வளருதடீ
மெச்சியுனை யூரார்—புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடீ

கன்னத்தில் முத்தமிட்டால்—உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடீ
உன்னைத் தழுவிடிலோ—கண்ணம்மா
உன்மத்த மாகுதடீ

சற்றுன் முகம் சிவந்தால்—மனது
சஞ்சல மாகுதடீ
நெற்றி சுருங்கக் கண்டால்—எனக்கு
நெஞ்சம் பதைக்குதடீ

உன் கண்ணில் நீர் வழிந்தால்—என்நெஞ்சில்
உதிரம் கொட்டு தடீ
என் கண்ணிற் பாவையன்றோ?—கண்ணம்மா
என்னுயிர் நின்னதன்றோ?

சொல்லு மழலையிலே—கண்ணம்மா
துன்பங்கள் தீர்த்திடுவாய்
முல்லைச் சிரிப்பாலே—எனது
மூர்க்கம் தவிர்த்திடுவாய்

இன்பக் கதைகளெல்லாம்—உன்னைப்போல்
எடுகள் சொல்வதுண்டோ?
அன்பு தருவதிலே—உனைநேர்
ஆகுமோர் தெய்வமுண்டோ?

மார்பில் அணிவதற்கே—உன்னைப்போல்
வைரமணிகளுண்டோ?
சீர்பெற்று வாழ்வதற்கே—உன்னைப்போல்
செல்வம் பிறிது முண்டோ?

குறிப்பு:—

அனைவர்க்கும் எளிதில் பொருள் விளங்கக்கூடிய நடையில், கள்ளமிலா வெள்ளைச்சொற்களால் அமைந்துள்ள இனிய பாடல்களும், காலத்துக்கேற்ற புதிய புதிய கோலம் பூண்டுவரும் அழகிய காவியங்களும் தமிழில் இல்லையென்று பலரும் குறை கூறுவதை நாம் பன்முறையும் கேட்டிருக்கிறோம். இத்தகைய கவிகளும், காவியங்களுமே தாய்மொழிக்குப் புதிய உயிர் தருகின்றன. பழைய இலக்கியத்திற்கும் தமிழ் மக்களுக்கும் பாலம் அமைத்தல் இன்றியமையாதது. இத்தகைய பாலமே நவீன இலக்கியம். இப்பாலமின்றி, நமது மக்கள் வாழ்விற்கும் இலக்கியத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லாமல் போய்விடும் என்பது திண்ணம். இங்ஙனம் பண்டைப்பழம் பெருமையோடு நம் புது வாழ்வை இணைக்க முயன்ற பெரியார் இருவருள் பாரதியார் ஒருவர்.

பாரதியார் ஓர் உண்மையான தமிழ்க்கவி. 'காரிகை கற்றுக் கவிபாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று' என்னும் தமிழ்நாட்டுப் பழமொழியின் தத்துவத்தை நன்குணர்ந்தவர். 'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளியுண்டாகும்' என்பது, இக்கவி, தம் சொந்த அனுபவத்தால் கண்டறிந்த உண்மையே. 'தமிழர் மறந்தாலும் தமிழ் மறவாத இப்புலவர் பெருமான்' தமிழ்நாட்டு ரவீந்திராவர். இவர் வங்கநாட்டுப்புலவர் திலகம்போல் ஆழ்ந்தகன்ற பாண்டித்தியம் வாய்ந்தவரல்லர். எனினும் கவிதையழகில், இவரது அருட்கவிகள் ரவீந்திரரின் பாடல்களுக்குச் சிறிதும் இளைத்துக் காணப்படுவன அல்ல.

"பண்டொருநாள், கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகருணனும்—தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?" என்று ஆண்டாள் அருளியவண்ணம், பேருறக்கத்தில் கும்பகருணனையும் வென்று பேச்சுமூச்சின்றி அசையாது கிடந்த தமிழகத்தைத் தம் கவிமுழக்கத்தால் தட்டியெழுப்பிய பெருமை நம் செந்தமிழ்க் கவிச்சிங்கமான பாரதிக்கே யுரியது. இத்தகைய கவிச்சிங்கத்தை இனிது போற்றாது, கொன்ற 'பெருமை'யும், தமிழ் நாட்டிற்கே யுரியதாகும்.

பாரதியார் பாடல்களில் சில, 'கல்லைப்பிசைந்து கனியாக்கி' தேசபக்தி வெள்ளத்தே அழுத்தும் ஆற்றல் வாய்ந்தன. சில, வற்றியுலர்ந்த தோல்களுக்கும் எலும்புக்கூடுகளுக்கும் இன்னுயிர் அளிப்பன. இன்னும் சில, வறண்டயர்ந்த இருதயங்களுக்கு உணர்வென்னும் அமுதம் ஊட்டி, பாலைவனமும் பசுஞ்சுடர்ச் சோலையாகப் பொலியும் வண்ணம் அற்புதம் விளைவிப்பன.

பண்டைத் தமிழிலக்கியம், பண்டைத்தமிழர்—பெரு வாழ்வைப் பிரதி பலிக்கும் நிலைக்கண்ணாடியாக அமைந்து விளங்குகிறது. தமிழர் புதுவாழ்வின் துறைகளையும், புதிய கனவுகளையும், லட்சியங்களையும், 'அடுத்தது காட்டும் பளிங்குபோல்' ஒருவாறு எடுத்துக்காட்டும் புதிய கவிகளைப்பாடியவர் பாரதியாரேயாவர்.

'கண்ணம்மா—என் குழந்தை' யென்னும் பாட்டு ஓரிய கவி—மாணிக்கமாகும். இத்தகைய பாட்டு நம் புதிய தமிழிலக்கியத்தில் 'மலடிவயிற்று மகன்போலே' தோன்றிய ஓர் அருங் குழவியே. இது 'பேசும் பொற்சித்திர'ங்களான குழந்தைகளின் மலர்வாய்ப்பிறந்த மழலை—மொழிபோல் தெவிட்டாது தித்திக்கின்றது. இப்பாட்டில் மலரில் மணம்போல், மணியில் ஒளிபோல், கவிதையழகோடு பண்ணழகும் கலந்து பரிமளிக்கின்றது.

* உத்தம ரஹஸ்யம்.

(சுத்தானந்தபாரதி)

கீதையின் உயிரான அருள்வாக்குகள் இனி வரும் 17 உபதேசமணிகளாகும். இதுகாறும் ஸாத்வீக நெறியையும், குணப்படிகளையும் உபதேசித்து, இப்போது அவற்றிற்கெல்லாம் உயர்ந்த ஜீவன் முக்தியில் கீதாயோகம் பறந்துலவுகிறது. "எதிலுஞ் சிக்கா மதியாளனாகி; ஆசை நீத்து, தன்னை வென்று, (அகந்தைப் பற்றைத்) துறந்தவன், வினைக்கட்டற்ற சித்தி பெறுகிறான்.

அவனுக்குச் செய்யவேண்டிய காரியம் எதுவும் இல்லை; அவனை எவ்வினையுங் கட்டுப்படுத்தாது; அவன் செய்தும் செய்யாதவன்; செய்யாமலிருந்தும் எல்லாம் செய்தவனாவன்.

"குந்தியின் செல்வனே! அப்படி வினைச்சுமை யுதிர்ந்து சுத்தசித்தி பெற்றவன் சச்சிதானந்த பரப்பிரம்மத்திற் கலப்புறும் சிறந்த ஞான நிஷ்டை பெய்தும் விதத்தைச் சுருங்க அறிவாயாக."

இப்போதைக்கு மனிதனின் உன்னத தத்துவம் புத்தி; எதிலும் அகந்தைப் பற்றும் ஆசையும் அற்று, தன்னை வென்று, உள்துறவடைந்து, வினையுதிரப்பெறுவதாவது பூரணமான உள்ளமைதி பெறுவதே; இது சுத்த புத்தியாலேயே இயலும்.

"மாசிலாத மதியுடையோனாய், (சுத்தபுத்தியுடையோன்) (ஸாத்வீக தாரணையால்) உறுதியால் மனம் வென்று நிறுத்தி, (புறப்பொருள்களை நோக்காது) விஷயம் விடுத்து, பகை விருப்பின் விகற்ப மொழிந்து, தனிமை நாடி, 'மிதவுணவுண்டு, உடல் மொழி, மனம் மூன்றையும் வென்று, தியான யோகத்தில் ஈடு

* XVIII 49—78.

பட்டு என்றும் திடவைராக்கியம் பெற்றவனுகி, அகந்தை, ராஜஸவன்மை (பலம்) செருக்கு, காமம், கோபம், பரிக்ரகம் (பிறர் பொருளை யேற்றல்) நீத்து, மமதையின்றி அமைதி பெற்றுள்ளோன் ப்ரம்மமாகிடத் தக்கவனுவான். பிரமத்தோடு கலந்தின்பமானேன், (எதனுலும்) கலங்கிடான்; எதிலும் விருப்பற்றுன்; உயிர்கள் யாவையும் ஒன்றெனக்காண்பான்; அவன் என் உத்தம பக்தி (பராபக்தி) பெறுவான்.

மனிதனின் ஆசையகந்தைத் திரைநீங்கினுல், புத்தி சுத்தமாகும்; சுத்த புத்திக்கு ப்ரம்மம் துலங்கும். அந்தப்ரம்ம த்யானத்தால் பிரம்மத்துடன் ஈரறக்கலந்து அதுவே யாகிறுன். பின்பு அவன் தன்னெடுந்தானேயிருப்பதால், உள்தனிமை, உள்ளமைதி, உள்ளத்திண்மை யெய்துகிறுன். சந்தைக் கூட்டத்திலும் அவன் தனிமை காண்பான்; எதைப்பற்றியும் அவனுக்கு சங்கற்பம் இராது; எளிதாக வந்ததைப் பசியளவிற்கு மிதமாகவுண்பான். நான் எனது என்று எதையும் பற்றுன்; பிறரிடம் எதையும் எதிர்பாரான்: ராஜஸவலிமையால் எவருக்குந் தீங்கிழைக்கமாட்டான், தன்னை வருத்தினும் பொறுமையிழக்கமாட்டான். தான்பிரமத்துடன் கலந்து அதுவே யனைத்துமெனக் காணும்போது, அளவற்ற அன்பே அவனிடம் துளிர்க்கும். அதுவே உயர்ந்த கடவுளன்பு. எல்லாம் ஒரே அகண்டாகார ஸ்வரூபமாய் அவனுக்கு விளங்கும். பரப்ரம்மத்துடன் ஒன்றிய ப்ரம்மஞானி தனது சித்தம், செயல், இருப்பு, நடப்பு, பேச்சு, காட்சி அனைத்திலும் ப்ரமானுபவனுகவே யிருக்கிறுன். பலவாகும் தோற்றங்களில் ஒன்றையே காண்கிறுன். இதுவே சீரிய அன்பு.

"இந்த பரமபக்தியினுலேயே நான் யார்? எத்தகையோன்?" என்பதை யுள்ளபடி நன்கறிகிறுன்; அந்த பக்தியால் என்னை உண்மையாயறிந்த பிறகு ("தத்" என்று மறைகள் முழங்கும்) பிரம்மத்தில் (புருஷோத்தமனுன என்னில்) ஈரறக்கலக்கிறுன்; இப்படி ப்ரம்மைக்கியம் எய்திய பின்பும் அவன் புறச்செயலைத் துறக்கவேண்டியதில்லை. "என்னில் ஈடுபட்ட யோகியானவன், இடையருமல், எப்போதும், எல்லாத் தொழில்களையுஞ் செய்துகொண்டிருப்பினும், எனதருளால், (என்னுடன் ஈரறக்கலந்திருக்கும்) அழிவற்ற அமுதநிலையையே எய்துகிறுன். (ஆண்

டவன் ஆணை; செய்வது சக்தி என்ற) அறிவினால், வினைகளனைத்தையும் எனக்கெனத் துறந்து (எனக்கு வேள்வியாகவே அனைத்தையும் அர்ப்பணித்து) என்னிலீடுபட்டு, புத்தியோகத்தைமேற்கொண்டு, சித்தத்தை என்னில் வைத்திரு." என்று பகவான் விஜயனுக்கு உபதேசிக்கிறார்; இனித்தனது அபயவசனத்தைக்கொடுத்துப் பரிபூரண சரணாகதியில் அவனை ஈடுறுத்துகிறார். கீதையின் உத்தம ரகசியக் கதிர் உதிக்கிறது!

"என்னிலே சித்தம் நிலைத்தவன் என்னருளாலே எல்லா இடர்களையுந் தாண்டுவான்; அகந்தையால் இதனைக் கேளாயாகிற் கெடுவாய்! அகந்தையுற்று, போர்புரியேன், என்று கருதுவையாயின் அத்தகைய உறுதி பொய்க்கும்! ஏனெனில், உனது வீரவியல்பே உன்னைப்போரில் வலிந்து தூண்டிப்பிணைக்கும். குந்தியின் செல்வ! உன்னியல்பினுதித்த வினையால் நீ கட்டுண்டவன். மதிமயக்கத்தால் அதைச்செய்ய விரும்பாவிடின், உன்னையறியாமற் செய்தே தீருவாய்."

"அர்ஜுனா! எல்லா வுயிர்களின் உள்ளத்திலும் இறைவன் கோயில்கொண்டுள்ளான்! தனது யோகமாயையால் எல்லா வுயிர்களையும். (ப்ரக்ருதி) யந்திரத்திலேற்றிச் சக்கரம் சுழற்றுகிறான்! (நீ அதைத் தடுக்கமுடியாது); பாரதா! எல்லா வகையிலும் அவனையே சரண்புகு! அவனருளால் பரம நித்திய சாந்த நிலையெய்துவாய்!

உள்ளத்துள்ள இறைவனை நம்பு; அவனுடைய யோகமாயையின் ஆடலென்று அனைத்தையும் காண்; அவனது செயல்வடிவான பிரகிருதியே செய்கிறதென்றறி. நீ நிமித்த காரணமே; இச்செய்கையின் பலாபலனும், வினைத்தலைமையும் உன்னைச் சேர்ந்ததென்று அகங்கரித்து உன்னிச்சையைப் பின்பற்றாதே; எல்லாம் வல்ல இறைவன் சரண்புகு; அவன் உன் மூலம் தனது இச்சையை நிறைவேற்றட்டும்.

"இரகசியத்திலும் அதிரகசியமான இந்த ஞானம் என்னால் உனக்குச் சொல்லப்பட்டது; இதனைத்திர ஆலோசித்து, எப்படி விருப்பமோ அப்படிச்செய். மீண்டுமொருமுறை அனைத்தினும் ஆழ்ந்த ரகசியமான எனது மஹா வாக்கியத்தைக்கேள். நீ எனக்கு உறுதியான அன்பன்; ஆதலால் உனக்கு இனியதைச் சொல்கிறேன்.

“என் மனத்தனாகுவாய்! எனது பக்தனாகுவாய்! என்னையே வணங்குவாய்! எனக்கு வேள்வியாற்றுவாய்! என்னையேயடைகுவாய்! எனக்கு நல்லினியனே, உண்மையிஃதறிகுவாய்— உறுதி கூறுகின்றனன். அறங்கள் யாவும் விட்டிடாய்! எனைச் சரண்புகாய்! உனை மறங்கள் (பாவங்கள்) யாவினின்றும் யான் விடுவிப்பேன்; வருந்திடேல்.”

இதுவே கீதையின் வீரமுழக்கம், மனிதஜாதிக்கு அபயவசனம். ஸாத்வீக தர்மம் உயர்ந்தது; ஆயினும் அதுவும் குணக்கட்டுப்பாடுள்ளது. குணாதீதப் பொருளைக் குணாதீதனே பெறமுடியும். முக்குண விகாரங்கள், தொந்தக் கட்டுகள், அனைத்தினும் உதித்த அறங்களையெல்லாம் விட்டுவிடலாம். வாழ்வனைத்தையும் அவனுக்கே வேள்வியாக்கி நம்மை வேரோடு அவனடியில் அடைக்கலமாக்கிவிட்டால் அவன் தனது இச்சைப்படி நம்மை நடத்தி ஈடேற்றுவான். உடல் உன்னதல்ல; இது இயற்கையின் செய்கை; உயிர் உன்னதல்ல; அது ஆண்டவன் உடல். அவனே உயிர், உலகாக விரிந்துளான்; வாழ்வு உன்னதல்ல; அது அவனால் அவனது உலகலீலைக்காக நியமிக்கப்பட்டது; அது அவன் உரிமை. முக்குண மாயையின் வசப்படாதே! அகந்தைத் தூண்டுதல்களுக்கு அடிமைப்படாதே! ஆண்டவன் உள்ளத்தில் இருப்பதை நம்பு! உன் வாழ்வின் தேரை அவன் நடத்துகிறான்! உன்னெதிரேயிருக்கும் பகைவன்மைகளை அவன் தீர்த்து விட்டான்! நீ ஒரு நிமித்தமே! அவன் பணியைப் புறத்தே செய்யும் கருவியே நீ! அவனைச் சரணடை! அவன் உனது இயற்கையினின்றும் ஏவும் பணிக்குத் துணி! புண்ணியபாவமெல்லாம் அவனிடம் விட்டு விடு; அவன் சர்வ வல்லவன்! சர்வ சுத்தன்! நீ பாவம் என்று நினைக்கும் தீமைகளை அவன் போக்குவான்? உன்னை அவன் தீமையனைத்தினின்றும் நீக்குவான்! உன் சொந்த மனக்கட்டுமானங்களிற் சிக்கி வருந்தாதே! பரமாத்மாவை நம்பியடை; அந்த பரமாத்வே உருக்கொண்டு உன்னைப் பணிக்கிறேன்! என்னையெண்ணு! செயல்களை எனக்கு நிவேதி! செயலிலும் பலனிலும் பற்றைவிடு; என்னையே பற்று! மற்றதெல்லாம் என்னிச்சைக்கு விட்டுவிடு! என்வழி அரைகுறையான உலகவழியல்ல; அது அனைத்தும் வல்லதாய், என்னையே தரும் அத்யாத்மவழி. நானே வினை வேள்வித் தலைவன்! இயற்கையையும் ஆன்மாவையும் இணைத்து உலகலீலையைநடத்தும் புருஷோத்தமன்! ஆன்மாவாக யான் உன்னுள் உள்ளேன்! ஆன்மா நித்யமுக்தன்! எதிலும், மனிதன் செய்த எந்த அறத்திலும் கட்டுப்

பட்டதல்ல: அது சுத்த சுதந்திர சமத்துவ நித்யப்பொருள்; அது எதையும் செய்வதில்லை. எனது பணியை இயற்கையே உன்மூலம் செய்கிறது; அதில் தீமைகள் வருமென அஞ்சுகிறாய்; எல்லாத் தீமைகளினின்றும் நான் உன்னைக்காப்பேன்! செய்வதை என் வேள்வியாகச்செய்! என்னை முற்றும் நம்பிச் சரண்புகு! அறிவாலறிந்து, பணியால் அணிந்து, அன்பாற் கலந்து என்னுடன் ஒன்றுபட்டு இன்புறுவாய்!

இதுவே கீதையின் ரகசியம்! கீதாயோகத்தைப் பரிபூரண சரணாகதியோகமென்றே கூறலாம். பூரண ஆத்ம ஸமர்ப்பணத்தால் மனிதான்மா கடவுட் கலப்புற்ற அகண்டான்மாவாக விரிகிறது; குறுகிய அகந்தையைக் கட்டுடைத்து, வாழ்வை அது விசாலப்படுத்தி தெய்வத்திறனைத் தந்து தெய்வ இச்சையை நம்மூலம் நிறைவேற்றுகிறது; ஒரு சிற்றாறு கடலையடைந்து, அகண்டக் கடலாவது போலே ஜீவாத்மா பரமாத்மாவை முழுதும் சரணமடைந்து அவன்மயமாகிறது.

இத்தகைய ஞானபக்தி கர்மயோக ரகசியத்தை, ஜீவன்முக்திவாழ்வை, சரணாகதியின் இன்பத்தைப் பேரன்பர்களும் யோகிகளும் அறிவர்; இத்தெய்வீகக் கீதையை தூயமனத்துடன் தவவொழுக்கத்துடன் கற்றுக்கேட்டு சிந்தித்து நடப்போன் தெய்வத்தன்மை பெறுவதுறுதி. ஆனால் பகவான் இந்த ஞானத்தை எவர்மீதும் வற்புறுத்தவில்லை; வற்புறுத்தலினாற் செய்வதெல்லாம் அரைகுறையாகும். "தவமிலாதவன், கடவுளன்பற்றவன், கேட்க ஆவலற்றவன், என்னை நிந்திப்பவன், இவர்களுக்கு என்றும் (வலுவில்) சொல்லற்க. இது பரம அத்யாத்ம ரகசியம்; என்னன்பு மிக்கோன், என்னன்பரிடையே இதை விளக்கி ஐயமின்றி என்னையே அடைகிறான்; எனக்கினிய காரியம் செய்பவன் மனிதருள் அவனினும் பிரிதில்லை; உலகில் அவனினும் எனக்கு மிகவும் இனியன் வேறெவனுமில்லை. நம்மிருவருக்கும் நடந்த இந்த சம்பாஷணையைத் தினம் பாராயணஞ்செய்வோன், என்னை ஞானவேள்வியால் வழிபடுகிறான் என்று நான் மதிக்கிறேன். சிரத்தையுடனே, அசூயை யற்று, இதனைக்கேட்பவன்கூட விடுதலையெய்தி, நற்செயலாளரின் நல்லுலகங்களையடைவான். பார்த்தா! அதிரகசியமான இந்த உபதேசம் ஒருமனப்பாட்டுடன் உன்னால் கேட்கப்பட்டதன்றோ? தனஞ்ஜயா! உனது அறியாமையிருள் சிதைந்ததா? (உன் சித்தந்தெளிந்ததா)." என்கிறார் பகவான்; ஆம் எவனுடைய சித்தந்தான் இந்தப் பரம வசனத்தைக்கேட்டுந் தெளியாது?

(இவ்வழகிய கட்டுரை சுவாமிகளின் "கீதை காட்டும் பாதை" என்ற புத்தகமணியில் ஓர் அத்தியாயம் புத்தகத்தின் விலை 10 அணாவே. "பாரத சக்தி நிலையம்" புதுச்சேரி என்ற விலாசத்திற் கெழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.)

பிச்சைக்காரன்.

(பி. ஸ்ரீ. ஆச்சாரியா.)

இந்தியாவில் பிச்சைக்காரர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒன்று, நாட்டின் வறுமை; வேறொருகாரணம், பிச்சைக்காரருக்கு நமது நாட்டார் கொடுக்கும் கௌரவம்; மூன்றாவது காரணம், தொழில் முயற்சிகளில் விருப்பமின்மை அல்லது வெறுப்பாகும். இவை முக்கியமான காரணங்கள்; வேறுகாரணங்களுமுண்டு.

நமது நாட்டிலுள்ள பிச்சைக்காரர்கள் விநோதமான பிராணிகள். உடுக்கக் கந்தையும் குடிக்கக் கூழுமில்லாமல், அலைந்து திரிபவர்களானாலும், அவர்களது செருக்கிற்கும் மிடுக்கிற்கும் குறைவில்லை. அவர்கள் தரித்திரதேவியின் தவப்புதல்வர்கள்; எனினும் பெருஞ்செல்வர்களுக்குமேல் பெருமை பேசுவார்கள். வாழ்க்கையின் துன்பங்களின்மீது அவர்களுக்கு ஏகபோக உரிமையுண்டு. எனினும் துன்பக்கடலில் மூழ்கிப்போகாமல் முகத்தை மேலே தூக்கி மிதந்துகொண்டே யிருப்பார்கள்.

சோகமே பிச்சைக்காரன் வடிவம் எனினும் போகத்தையும் பொருளையும் நம்பிவாழும் பணக்காரனைப்போல், பிச்சைக்காரன் தன் நெஞ்சில் கவலை மூட்டையைச் சுமந்து திரிவதில்லை. காசொன்று நீட்டினால், அவன் ஆனந்தக்கூத்தாடுவான்.

நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்துண்ணும் தொழில் முயற்சிகளில் பிச்சைக்காரனுக்கு விசேஷவெறுப்பு உண்டு. தொழிலைப்போல் இழிவு வேறொன்று மில்லை என்பது அவன் கொள்கை எனினும் அவன் தன் 'தொழிலி'லே இளைப்பாறுவதற்குக்கூட நேரமில்லாமல் அல்லும் பகலும் அனவரதமும் கருமமே கண்ணாக உழைத்து வருகிறான்.

நூறு வீடுகளில் பிச்சை கிடைக்கவில்லை எனினும், பிச்சைக்காரன் தன் நம்பிக்கையை இழந்து விடாமலே, 101-வது வீட்டிற்குச்சென்று பிச்சை கேட்பான். அவனுடைய நம்பிக்கைக்கும் சமயோசித புத்திக்கும் அளவேயில்லை.

பிச்சைக்கார உலகில், கூன், குருடு, செவிடு, நொண்டி முதலியவர்களுக்கு விசேஷ வசதியில்லை. தடிப்பேறிய உடலுக்கும் கொழுப்பேறிய உள்ளத்திற்குமே சௌகரியங்கள் ஏற்படுகின்றன. வாழ்க்கைப்போரில், உடல் வளமும், மனவலியும் வாய்ந்த வீரர்களே வெற்றி பெறுகின்றனர்கள். பிச்சைக்கார உலகிலும், வலிமையும் பிடிவாதமும் பெறாத பேடிகளுக்கு வெற்றியில்லை.

வீரகுணத்தோடு பிச்சைக்காரனுக்கு விசேஷ வாக்குவன்மையும் உண்டு. இவனுடைய வாக்குவளத்தையும், வன்மையையும் கண்டு, 'வாக்கு வேட்டை' யாடும் அரசியல் பிரசாரகர்களும் பொறாமைகொள்ளுதல் வேண்டும். பிச்சைக்காரனுடைய பேசும் திறமை, வசனமாக வெளிப்படுவதோடு அமையாது, பாட்டாக வருவதும் சர்வ சாதாரணம்.

அழுகையும் தொழுகையும் பாட்டாகப் பிறக்கும் நம் தமிழ் நாட்டிலும், பிச்சைக்காரன்பாட்டு வியக்கத்தக்கதாகவே இருக்கும். நிகண்டும், இலக்கணமும் நெட்டுரு ஏற்றி, 'நீர்பூத்த" 'சீர்பூத்த', 'நார்பூத்த', 'கார்பூத்த' என்று பிரசங்களைச் செங்கல் அடுக்குவதுபோல், அடுக்கிவைத்துக் கவிகட்டும் பண்டிதர்களைப்போல், பிச்சைக்காரன் பாடுபட்டு இசைப்பதில்லை; பொருள் காண்பதில் மூச்சுமுட்டித்திணறும்படி பயங்கரமான கடுஞ்சொற்களையும் அபூர்வமான இலக்கணப்பிரயோகங்களையும் சித்திரவதைசெய்து சேர்த்துக்கட்டும் கவியரசர்களைப்போல், பிச்சைக்காரன் அருமையான தமிழ்ச்சொற்களையும் பழைய சுவடிகளில் பதுங்கிக்கிடக்கும் சொற்றொடர்களையும் தன்பாட்டிலே பிடித்து அடைத்து இம்சை செய்வதில்லை.

பண்டித கவிகளைப்போல் பிச்சைக்காரன் அதிகமான பொருளுக்கு ஆசைப்படுவதில்லை. ஒரு ரூபாய்க்குக் கவிராயர், பொய்யனை அரிச்சந்திரன் என்றும் குருடனைச் செந்தாமரைக்கண்ணனென்றும் பாடிவிடுவார். ஒதார்துணர்ந்த உத்தமக்கவியாகிய பிச்சைக்காரனோ, ஒருகாசுக்கு உன்னை மகாராஜாவாகவும், தர்மராஜாவாகவும், திரிலோக சக்கரவர்த்தியாகவும், முடிசூட்டிவைப்பான்.

> " மூச்சு விடுமுன்னே முந்நூறும் நானூறும்,
> ஆச்சென்றால் ஐந்நூறும் ஆகாதா? " என்றும்,

> " இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும்,
> அம்மென்றால் ஆயிரம் பாட்டாகாதா ? "

என்றும், கூறி ஏமாற்றும் கள்ளக்கவிகளல்லர், பிச்சைக்காரவுலகில் காட்சிதரும், " வெள்ளைக்கவி காளமேக " ங்களான இயற்கைக் கவிராயர்கள் !

போலிக் கவிராயர் அடுக்கிவைக்கும் பொருளற்ற வெறும் சொல்லடுக்குகளல்ல, இயற்கைக் கவிராயர்களான பிச்சைக்காரர்கள் சமயோசிதமாகப் பாடும் பாடல்கள் ! இதற்கு ஓர் உதாரணம் தருவோம். ஒரு பிச்சைக்காரன் வீட்டுவாசலில் வந்து நின்றான். அப்போதுதான் அவ்வீட்டுப்பெண்மணி வீட்டைப்பூட்டிக்கொண்டு வெளியே வந்தாள். பிச்சைக்காரன், உடனே, பாடுகிறான்:—

> " மகா லட்சுமி ! பிச்சை !
> தர்மாராசாத்தி ! பிச்சை !"

என்று உரக்கக் கூவினான். " முடியாது ; பூட்டிய வீட்டை நான் எவ்வாறு திறப்பேன் ?" என்று பெண்மணி கூறினாள்.

> " பூட்டைத் திறப்பது கையாலே—மனப்
> பூட்டைத் திறப்பது, மெய்யாலே,
> வீட்டைத் திறக்க முடியாமல் நின்று
> விதி ! விதி ! என்கிறார் ஞானப்பெண்ணே !"

பெண், படித்தபெண். சிரித்துக்கொண்டு பூட்டிய வீட்டைத் திறந்து பிச்சை யிடுகிறாள். தன் சக்தியை உணர்ந்துகொண்ட பிச்சைக்காரன், அவ்வளவோடு வீட்டை விட்டுப்போக விரும்பவில்லை.

அவன் தனக்கு ஒரு கிழிந்த துணி வேண்டுமென்று பிடிவாதம் செய்கிறான். பெண் மறுத்துவிடுகிறாள். பிச்சைக்காரன், தன் 'சக்தி' ஆயுதத்தை மீண்டும் பிரயோகிக்கிறான்

—"பாம்பிருக்குது புற்றுக்குள்ளே—ஐக
பந்தமிருக்குது நெஞ்சுக்குள்ளே"

என்று பாடுகிறான், பெண், "உனக்கு இனி ஒன்றும் கொடுக்க மாட்டேன்: போ, போ!" என்று சொல்லுகிறாள். மீண்டும் பிச்சைக்காரன் பாடுகிறான்:—

"குதிரை கட்டிய லாயத்திலே, மனக்
கோட்டையிலே, சந்தைப் பேட்டையிலே
எதிரி தான் வந்து தட்டுகிறான்; அதை
எதென்று கேளடி, ஞானப்பெண்ணே!"

பெண், படித்தவள் என்று சொன்னேன். முழு உண்மையும் கூறுமிடத்து, அவள் ஆங்கிலக்கல்விப்பயிற்சி வாய்ந்தவள்; நவீன கவிநாயகமாகிய ரவீந்திரநாத, "கீதாஞ்சலி"யில் அளவு கடந்த காதல் கொண்டவள். இப்பொழுது பிச்சைக்காரன் பாடிய 'குதிரை கட்டிய லாயத்திலே' என்னும் கும்மியைக் கேட்டதும், "ஆ! ஆ! என்ன பாட்டு! என்ன பொருள்! நமது நாட்டில் பிச்சைக்காரன் பாட்டு இது என்றால், தாகூர் அடிகள் தோன்றியதும் வியப்பாமோ?" என்று பிரமித்துக்கொண்டிருக்கிறாள். பிச்சைக்காரன் உச்சஸ்வரத்தில்,

"பித்துப் பிடித்தமனக்குரங்கை—வெறிப்
பேயும் பிடித்துக்கொண்டாட்டமிட்டால்,
அத்தை அடக்க மருந்து செய்தால், பரி
அன்று நடத்தலாம் ஞானப்பெண்ணே!"

என்று பாடிமுடித்து, ஞானப்பெண்ணிடம் பழையவஸ்திரம் பெற்றுச் செல்லுகிறான்.

இதனால், நம் நாட்டுப் பிச்சைக்காரர்களில் சிலர், கவிராயர்களாயிருப்பதோடு, வேதாந்திகளாகவும் விளங்குகிறார்கள் என்பது புலனாகும். வேதாந்தம் இல்லையானால், எண்ணிறந்த தினங்களையும் ஏகாதசிகளாகக்கழிக்கும் இவர்கள், கவலைக்கடலுள் முங்கி முழுகி மாண்டுபோகாமல், அக்கடலிலே அமைதியாக நீந்தி விளையாடிக்கொண்டிருக்கக் கூடுமோ?

முரண்பாடு.

"வியன்"

(முன் 225-ம் பக்கம் தொடர்ச்சி)

II

பொழுது புலர்ந்தது. எனக்கு முன்பே, துயில்விட்டெழுந்த பறவையினங்கள் சிறகடித்து ஆரவாரத்தினால் பூரித்தன. அன்னாள் நன்னாளாக முடியவேண்டுமென்று சூரிய பகவானைத் தோத்தரித்தன வென்றே கருதினேன். அவ்வின்பம் மேலிட்டு, க்ஷணநேரம் அவைகளுடன் ஒருமித்து, அவைகளின் பிரார்த்தனையிற் கலந்துகொண்டேன். 'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தை தன்னுள் கொண்ட சங்கநாதம் சமீபத்திலிருக்கும் கோவிலினின்றும் ஒலித்தது. காலைச் சங்கு. என் பிரார்த்தனை பலனுற்றது என்றே நம்பினேன். அத்தாட்சிக்கு ஜாஜ்வல்யமான பிரகாசத்துடன், தன் இருட்கோட்டையினின்றும் வீறுகொண்டு வெளிக்கிளம்பினான் அருணன்.

சடுதியில் காலைக்கடன்களை முடித்துக்கொண்டேன். சற்று நேரஞ்சென்று காலைபாகாரம் அருந்திவிட்டு என் இருப்பிடத்திற்கு ஏகினேன். 'எட்கார் வாலஸ்' புத்தகமொன்றைக் கையிலேந்திப் படிக்கவாரம்பித்தேன்.

சிறிது நேரம் சென்றிருக்கும். ஒரு வேலைக்காரி ஓடோடியும் வந்து "எஜமானரின் மைத்துனரும் அவர் மனைவியும் வந்திருக்கிறார்கள். இவ்வறையில் அவர்களுக்கு ஜாகை செய்யவேண்டுமாம் ஆகையால் உங்களை அடுத்த அறையில் இருக்கச் சொன்னார்கள்" என்றாள்.

"யார்?" என்றேன்.

"எஜமானியம்மாள்" என்றாள்.

"சரி" என்று சொல்லிவிட்டு, வந்தவுடன் என் தலையிலா அவர்கள் இருக்கவேண்டும் என்று நினைத்துக்கொண்டே "யாராவது

வேலைக்காரனை யனுப்பு. சாமான்களை எடுத்துப்போகவேண்டும்" என்றேன்.

அதற்கவள், வேலைக்காரர்கள் எல்லோரும் வெளியே போயிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டே திரும்பவும் ஓடிவிட்டாள். நானே சாமான்களை யெடுத்துச்சென்றேன்.

சாமான்களை ஒழுங்காக வைப்பதற்கும் மனம் செல்லவில்லை. பக்கத்திலிருந்த நாற்காலியில் அமர்ந்தேன். துக்கம் மேலிட்டது. தாய் தந்தையரின்மையைக் குறித்து வருந்தினேன். என் எழ்மை நிலையைப்பற்றி நினைப்பதன்முன் கண்களினின்று களகளவென்று கண்ணீர் பெருகவே, தேம்பித் தேம்பியழுதேன். எதற்காக அவ்வளவு துக்கித்தேன் என்று இப்பொழுது நினைக்க எனக்கு வெட்கமாயிருக்கிறது. அப்படியே துயிலில் ஆழ்ந்துவிட்டேன் என்று நினைக்கிறேன். ஏனெனில் பிறகு என்ன நடந்ததென்பது எனக்கு நினைவில்லை.

மத்தியானச் சாப்பாட்டிற்கு அழைக்கப்பட்டேன். அன்றைய சாப்பாடு மோக்ஷா. ஐமாக்கள் என்னென்னவென்று சொல்ல வேண்டாமா? எனக்குச் சொல்ல விருப்பந்தான். ஆனால் அவைகளின் பெயர்களை இன்னும் நான் அறிந்துகொள்ளவில்லை. ஆகையால் மொத்தத்தில் அன்று முதல் தரமான சாப்பாடு என்றமட்டோடு நிறுத்திக்கொள்கிறேன். ஆறெல்லாம் பாலாயோடினும் என்ன? எனக்கு ஒருகவளம் அன்னமேனும் ருசிக்கவில்லை. பக்ஷணங்களில் கை வைத்திருப்பேன் என்று நீங்கள் சொல்லலாம். சத்தியமாக நான் ஒன்றையும் கையாலும் தொடவில்லை. அதன் காரணத்தைக் கீழே சொல்லுகிறேன்.

என் மாமன் மைத்துனர், ஓர் முதிர்ந்த சைவப்பழமாய்க் காணப்பட்டார். ஒருமனிதனின் வாட்டசாட்டம் அவன் சேமித்து வைத்திருக்கும் பொருளைக் குறிக்கின்றது என்ற விஷயம் உண்மையானால், அவர் ஓர் கோடீசுவரப்பிரபு வென்றே சொல்லவேண்டும். அவர் மனைவியும் சற்றேறக்குறைய உருவத்தில் அவரைப்போலவேயே இருப்பாள். என்றாலும் ஸ்திரீ ஜனங்களின் செழுமைத் தோற்றம் பிரத்தியேக வனப்புடைய தல்லவா? அவ்வகையில் அம்மையார், ஓர் மகா ராணிபோல் தோன்றினாள். அவளை, ரவிவர்மா வென்ற ஓவியக்காரர் கோஷ்டியைச் சார்ந்தவர்கள் அழகில்லையெனக்கூறிடினும், ஆனந்தகுமார் என்பவரைச் சேர்ந்த கோஷ்டியினர் அழகுடையவள் என்று கூறினர். அது எப்படியேனும் இருக்கட்டும்.

நாங்கள் எல்லோரும் ஒன்ருகவே போஜனம் செய்தோம். அந்த சமயத்தில் அம்மையார் கம்பீரமாக, யானையைப் பழித்தநடையுடன் அங்கு தோன்றினுள். என் மாமனைப்பார்து "உங்களுக்கெதிரில் உட்கார்க்திருக்கிருனே அவன்தான் உங்கள் சகோதரியின் பிள்ளை போலிருக்கு" என்ருள். என் மாமன் வாயில் சாதம் இருந்ததால் அவசரமாக விழுங்கிவிட்டுப் பதில்சொல்ல விரும்பி, அப்படியேசெய்யவே, பிறைபேறிக்கொண்டது. அதையும் பாராட்டாமல் தலையை அசைத்துக்கொண்டே ஒங்கி ஒங்கித் தலையிலறைந்துகொண்டார். எனக்கு என்னவாகவிருந்திருக்கும் அப்பொழுது? நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்.

அம்மாள் கூறத்தொடங்கி "அவ்வளவென்ன அவசரம்? சாவகாசமாகச் சொன்னுல் போதாதா? என்ன கெட்டுப்போகிறது" என்ருள்.

"குழந்தை முதல் அவனை வளர்த்துவந்த விசுவாசம்தான் அவரை அப்படிச் சொல்லும்படி செய்தது." என்ருர் மைத்துனர் பெருமான்—என் மாமனின் மைத்துனர்.

'பாவம்' என்ருர் ஒருவர் 'அநாதை' என்ருர் இன்னெருவர். 'சோற்றுக்கு நஷ்டம், பூமிக்குப்பாரம்' என்று யாரோ உட்பக்கமிருந்து சொன்னதுபோல் எனக்குத் தோன்றியது. போதும். இன்னும் என்ன நடந்ததென்று சொல்லவேண்டுமா? நீங்களானுல் இலைமுன்னுவது உட்கார்ந்திருப்பீர்களா? நன்ருய் யோசித்துப்பாருங்கள்.

இவ்வளவும் நடந்தபிறது நான் தாம்பூலம் வாங்கிக்கொள்ளவில்லையென்றும் யாரேனும் அழப்போகிருர்களா? ஆகையால் கைகழுவியதும் எனது கவலைக் கிடங்கிற்குச் சென்றேன்—என் கால்கள் என்னை இழுத்துச் சென்றன. உட்கார்ந்தேன். என் மனக்கண்ணுடியை நன்ருகத்துடைத்துக்கொண்டு, என்னை அதிற் கூர்ந்து கவனிக்கலானேன்.

கடவுளே! என்னைப்படைக்க வேண்டுமென்று எத்துணை நாட்களாய் அடங்கொண்டிருந்தீர். பெற்றவரை யழித்தீர். பேய்களிடம் காட்டிக்கொடுத்தீர். ஒரே ஆறுதல்மட்டும் தந்தீர். என் மாமனை என் பக்கலில் நிறுத்தினீர். அவர் மட்டும் எனக்கில்லையேல், இன்று என் ஜன்மம் சாபல்யமாய் இருபது வருடங்களாயிருக்கும். கமலாவும் கூடவிருந்து இந்த மஹா பாபகரமான ஆத்மாவை உயிர் நிலைக்கச்

செய்தாள். ஆ! என்னே எங்கள் இளமை! அதற்குமோர் இணையுண்டோ? பலிக்கிடாவிற்கு தளிர் தழைகள் தந்து வளர்ப்பதுபோல் ஆயிற்று என்கதி. இவைகளுக்கெல்லாம் ஆதி காரணம் எது? ஏழ்மையே. என்னே ஏழ்மையின் கொடூரம்! இனியாரை இன்னாராக்கும் ஆற்றல் படைத்த இவ்வரிய தன்மை பிரமனிடந்தானே பிறந்தது? பெண்ணைப் படைத்த பிரமன் புலியையும் ஏனோ படைத்தான்?

இன்னொருவரிடம் ஏதோ இரண்டு காசு இருக்கிறது. அதனால் அவன் கமலாவிற்கு ஏற்ற கணவன். என்னிடம் அந்தக் காசு இல்லை. அதனால் எனக்கு அவள் எட்டாப்பழம். அடகடவுளே! இதைப்போல் கொடுமை வேறெதும் உண்டோ?

பெட்டியைத் திறந்தேன், கடுதாசியும் எழுதுகோலையும் பற்றினேன். எழுதவாரம்பித்தேன்.

"எனது அருமை நண்ப!"

அந்த ஒருவரிக்குமேற் பேனா செல்லவில்லை. மனதிலோ எண்ணங்கள் மலை மலையாய்க் குவிந்துகொள்கின்றன, துணிந்து பின் வருமாறு வரையலானேன்.

"பிரிய நண்ப,

பேனாவைக் கையிலெடுக்கு முன்பு, உனக்கு ஒரு புத்தகப் பிரமாணம் எழுத நேரிடும் எனப் பயந்தேன். எடுத்தவுடன் எண்ணங்களனைத்தும் எங்கேயோ ஓடி மறைந்தன. பேனாவைப்பிடித்த மாத்திரத்தில் அதிசய சக்தியால் என் மனதுட்கருத்துகளெல்லாம் உனக்கு மாற்றப்பட்டிருக்க வேண்டுமென்று உறுதியாய் நம்புகிறேன். நான் அந்தக் கரண சுத்தியுடன் நினைத்தவைகள் அவைகள் ஆதலால், அவைகளின் திட்ப நுட்பங்கள் உனக்குத் திட்டமாய்ப் பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

என் பிரிய கமலாவை நீ மறக்கவில்லையல்லவா? எங்கள் பாலியவாழ்க்கை யென்ன? எங்கள் மாறா அன்பென்ன? எல்லாவற்றிர்க்கும் மேல் எங்கள் மனவொற்றுமை யென்ன? இப்பொழுது எங்கள்

அன்பைத் தகர்க்க—நேசத்தைப் பிளக்க ஓர் சம்மட்டி தயாராகிறதென்றுசொன்னல் நீ நம்புவாயோ? என்தோழியை, நேசக்கிளியை பரம துஷ்டனும் ஒருவனுக்கு மணம் செய்து கொடுக்கப் போகிருர்களாம். துஷ்டனுயினும் என்ன? பணம் வேண்டுமளவு இருக்கிறதாம். என்போன்றவர்கள் பரம ஏழைகள். ஆதலால் அவளை முகாலோபனம்கூட செய்பக்கூடாதென்று கட்டுப்படுத்திவிட்டார்கள் என்னே ஏழ்மையின் கொடுமை!

அன்ப, எனக்குமட்டும் கமலா கிட்டவில்லையானல்—அதைப் பற்றி சந்தேகமேயில்லை சத்தியமாகச் சொல்லுகிறேன், பஞ்சபூதங்களின் முன்னிலையில் சொல்லுகிறேன், உலகத்தில் ஏழ்மை, சம்பத்து என்ற வித்தியாசத்தைத் தகர்த்துப் பொடிசெய்துவிடத் தீர்மானிக்கிறேன். இவ்விஷயத்தில் என்னை ஓர் வீரத்தியாகியாகக் கருதலாம். ஏனென்ருல் எனக்கு என் உயிர் லக்ஷியமில்லை. வருவது வரட்டும்.

இவ்விஷயத்தில் நும்போன்றவர்களின் சகாயமும் அனுதாபமும் எனக்கு வேண்டிய அளவு கிடைக்கும் என்பது எனது துணிபு.''

என் அறைக் கதவை யாரோ தட்டுவதுபோல் கேட்டது. உடனே சென்று கதவைத் திறந்தேன். விகசித்த செந்தாமரை மலர்போன்ற வதனத்தைக் கண்டேன். தலைகவிழ்ந்தேன். ஏனெனில் அது என் கமலாவே. உள்ளே சென்று இரு ஆசனங்களில் அமர்ந்தோம். கமலா சுற்றுமுற்றும் அலங்கோலமாய்க் கிடந்த என் சாமான்களைக் கவனித்தாள்.

அதற்குள் நான் "அத்தி பூத்திருப்பது போலிருக்கிறதே" என்றேன்.

கமலா;— என் புஷ்பிக்காது. சம்மந்திகள் "ஊர்பார்க்க"ச் சென்றிருக்கிருர்கள்.

நான்:— அப்படிச் சொல்லு, காவல்காரன் வெளியே போயிருக்கிருன் அதனல் கைதி தப்பியோடி விட்டான்.

கமலா:— இருக்கட்டும், சிறிது நேரம் உனக்காகக் காத்திருந்தேன். வரவில்லையாதலால் நானே உன்னைத்தேடி வந்தேன்.

நான்:— ஏன்? (எனக்குள் மாலையிடவா?)

கமலா:—ஏனு? நேற்று என்ன முடிவு செய்துகொண்டோம்?

நான்:— எட்டுச் சுரைக்கா யென்றல்லவா நான் எண்ணினேன். இதுவும் எனக்கு ஓர் நல்லகாலம் என்றுதான் நினைக்கிறேன்.

கமலா:— நீ ஏன் அங்கு வரவில்லை?

நான்:— ஒரு லெட்டர் எழுதிக்கொண்டிருந்தேன் அதனுல் நமது ஏற்பாட்டை மறந்துவிட்டேன். தவிறவும்............

கமலா:— தவிறவும் என்ன?

நான்:— ஒன்றுமில்லை. அவர்களெல்லாம் இருப்பார்கள் என்று நினைத்தேன். அவர்கள் முகத்தில் எனக்கு விழிக்க இஷ்டமில்லை. ஓ! உனது புருஷன் வீட்டாரைப்பற்றி நான் யோசிக்காமல் சொல்லிவிட்டதற்கு மன்னிக்கவும். இன்று மத்தியானம் நடந்த விஷயங்கள் என் மனதைப் புண் படுத்திவிட்டன.

கமலா:— எனக்கு வரன் தீர்மானித்தாய்விட்டது போலிருக்கிறதே?

நான்:—நீதானே என்னிடம் நேற்றுச்சொன்னுய்.

கமலா:— அவர்கள் நினைத்துக்கொண்டிருந்தால் அரைக்கலியாணம் முடிந்துவிட்டது போலல்லவா நீ பேசுகிருய்?

நான்:— அதிலும் சந்தேகம் வேறுண்டா? அவர்கள் சொல்லுக்கு இரண்டாவதா?

கமலா:— படித்த நீயும் இப்படிச்சொல்லலாமா? எங்களுக்கெல்லாம் வாயும் வயிறும் இருப்பதுபோல் மனதும் இல்லையா?

நான்:— யார் இல்லையென்று சொன்னது? நீயும் சம்மதப் பட்டிருப்பதாகத்தான் கேள்வி.

கமலா:— இருக்கலாம், நடக்க நடக்கப் பார்ப்போம். உண்மையைச் சொல்லிவிடுகிறேன் எனக்கு அவனை மணக்க சற்றும் பிரியமில்லை. அப்படிச் செய்வதைக் காட்டிலும் உயிரிழப்பதுமேல் என்றாள். நான் கடவுளைத் துதித்தேன். மோக்ஷ வழி இப்பொழுது திறந்திருக்கிறது என்றுநினைத்தேன்.

கடைசியில் பேசுவதற்கொன்று மில்லையாதலால், சற்று நேரம் மௌனமாயிருந்தோம். இதைவிட்டால் வேறு சமயம் வாய்ப்பதரிது. உண்டு இல்லை யென்று தெரியட்டும் என்று துணிந்தேன். இதயம் பட படவென்று அடித்துக்கொண்டது. தேகம் கிடுகிடென்று ஆடியது. என் வாழ்கையின் முனை அந்த க்ஷணத்திலேயே நின்றது. மனதிலுள்ளவைகளையப்படியே கொட்டியளந்து விடவேண்டுமென்று அவா பிரவாகமாய்ப் பெருகினும் அதைச் சொல்லுவதற்கு வேண்டிய ஆற்றல் இல்லை என்னிடம். ஆகவே தீவட்டி வெளிச்சத்தில் கழுதை விழிப்பது போல் விழித்தேன். கடைசியாக பகீரதப் பிரயத்தினம்செய்து "கமலா!" என்றேன். அது என் குரல் தானோ வென்று நானே சந்தேகித்தேன். அவள் திரும்பப்பார்த்தாள் என்றே நினைக்கிறேன். ஏனென்றால் நான் அவள் முகத்தை நிமிர்ந்து நோக்கும் சக்தியற்றவனாயிருந்தேன். என்றாலும் கடவுள் ஓர் வழிவிட்டார். எப்படியென்றால் "என்ன?" வென்று கமலாவும் சற்று நடுங்கிய குரலிலேயே கேட்டாள். கடலில் முழுகப்போகும் ஒருவன் வைக்கோல் துரும்பைப் பற்றுவதுபோல், அவள் குரலினால் சற்று தைரியமடைந்தேன். உயிரைத் திருணமாக மதித்து,

"கமலா! எனக்கு கதி மோக்ஷம் ஏதாவது உண்டா?" என்று தட்டுத் தடுமாறிக் கேட்டேன். திரும்பவும் அவளைப் பார்ப்பதன் முன் என் உயிர் மறுவுலகம் சென்றுவிட்டு வந்தது. பார்த்தேன்

அவள் கண்களில் பரிகாசம் கூத்தாடியது! என் இதயத்தை ஆயிரம் வாட்கள் கொண்டு அறுப்பதுபோன்று இருந்தது. அப்படியே எழுந்து வெளியே சென்றிருப்பேன். அப்பொழுது கமலா, நிமிர்ந்து என்னைப்பார்த்து புன்னகை புரிந்து குறிப்பாக நோக்கினாள். அந்த நோக்கில் "உன் கேள்வி அனாவசியம். திறந்த வீட்டில் புகுவதற்குத் தயக்கமேன் ?" என்பது போன்ற உண்மைகள் தோன்றின. சுருங்கச்சொல்லின், அந்த நோக்கினிலே ஆவி கலந்துவிட்டோம்! தேனில் மிதக்கும் ஈயெனத் தத்தளித்தேன். எங்கள் ஒப்பந்தத்திற்கு அறிகுறியாக புனிதமானவோர் முத்தத்தை யளித்தேன்.

* * * *

இப்பொழுது நாங்கள் இருவரும் என்றும்போலவே பிரியாத்தம்பதிகளாக மட்டற்ற இன்பவெள்ளத்தில் மூழ்கியிருக்கிறோம் என்பதும், நான் முன் நினைத்ததுபோல் ஏழையேயல்லவென்றும், என் பெற்றோர் எனக்கு ஏராளமான ஸ்திதிகளைவைத்து என் மாமனை அதற்கு ட்ரஸ்டியாக வைத்துச் சென்றனர் என்பதும் உங்களுக்குப் புதுமையாகத் தோன்றவில்லையா ?

என் முதற்குழந்தையின் ஆண்டு நிறைவு விழாவிற்கு என் கலாசாலைத் தோழனான சுப்புராவ் தற்செயலாய் வந்திருந்தான். அவனிடம் என் விருத்தாந்தத்தைச் சொன்னபொழுது மிகவும் சந்தோஷித்தான். கடைசியில் "காதலென்பது மானஸீகத் தோற்றமும் இரத்தக் கொழுப்புமே தவிர வேறில்லை" என்று சொல்லிச் சிரித்தான். அதற்கு நான், "முன் சொன்னதிற்கும் இப்பொழுது நான் சொல்வதற்கும் முரணாயிருக்கிறதென்பது உண்மைதான். எல்லாம் ஈசனின் திருவிளையாடல்களாதலால் நம்மால் ஒன்றும் சொல்லக்கூடவில்லை" என்று வேதாந்தம் பேசினேன்.

சுபம்!

கண்ணன் குழலோசை.

(சடகோபன் எழுதியது.)

பாம்புத் தலை மேலே—நடஞ்செயும்
பாதத்தினைப் புகழ்வோம்
மாம்பழ வாயினிலே—குழலிசை
வண்மை புகழ்ந் திடுவோம். (பாரதி)

தன்னிருகரைகளின் மருங்கே வானுறவோங்கி வளம்பெற வளர்ந்துநிற்கும் தருக்களின் இடையே தான் அன்று புரிந்த பன்னலங்களைநினைந்து நினைந்துயமுனையாறு சில்நடம்புரிந்து செல்கிறது.

யமுனைக் கரையில் குழலின் இன்னிசை கேட்கின்றது. அதைக்கேட்ட ஜனங்கள் பரவசப்படா நிற்கின்றனர். குழலிசைப் பிறக்குமிடம் நோக்கி செல்கின்றனர். பெண்கள் தத்தம் வேலைகளைப் பாதி முடித்தும் முடியாமலும் போட்டவிடத்தில் போட்டு விட்டு யமுனையாற்றை நோக்கி ஓடுகின்றனர். கோவலச் சிறுமியர்கள் மென்முலைக் குதுகலிப்ப தங்கள் காவலையும் கடந்து கண்ணனைக் கவிழ்கின்றனர். தம்மை அலங்கரித்துக்கொண்டிருந்த பெண்கள் தம்மை முழுதும் சித்திரிக்குமுன் "நான்முன், நீ முன்"னென்று யமுனைக்கரையை நாடுகின்றனர். ஒரு கை வளை பூண்ட பெண்கள் மறு கை வளை பூண மறந்து ஓடுகின்றனர். கருது மனம் புறம்போக கண்ணுக்கு மையெடுத்த கையுமாய் ஒரு கண்ணிட்ட மையுமாய் வருகின்றார்கள். கோவிந்தன் கோமளவாயினிடைப் பிறக்கும் குழலிசை வண்மையை செவிநுகர்ந்து,

மடமயில்களொடு மான்பிணை போலே
மங்கைமார்கள் மலர்க்கூந்தலவிழ
உடைநெகிழவோர் கையால்துகில் பற்றி
யொல்கி யோடரிக் கண்ணோட"

கார்முகில் வண்ணனை வளைகின்றனர். மடந்தையர்கள் மனமுருகி மலர்க்கண் பணிப்ப நரையாடு குழலவிழ, முகம்வேர்ப்ப, குழலினின்னிசை யென்னுமளப்பரும் சலநிமூழ்கி கண்ணன்பால் தம்மனதைச் செலுத்தா நிற்கின்றனர். வானவரும் தானவரும் வந்து கூடுகின்றார்கள். மேனகை, திலோத்தமை, அரம்பை முதலானோர் கண்ணன் குழலோசைமுன் வெள்கித் தலை குனிந்து தம்ஆடல் பாடல்களை மறந்து நிற்கின்றனர். சங்கீத சாஹித்தியத்தில் வல்லுனரும் சுந்திரத் தெலுங்கினில் பாட்டிசைத்த தியாகராஜ மகிபனுக்கு "ஸ்வரார்ணவம்" என்ற கிரந்தத்தையளித்த நாரத முனிவனும்தன் வீணையை மறந்து கண்ணன் குழலோசையிலீடுபடுகின்றான். யாவரும் கண்ணன் அமுதகீத வலையில் சிக்குண்டு பாமனைத் தொழுது தம்மையே மறந்து கைகூப்பி நிற்கின்றார்கள். கண்ணன் குழலோசை அமரலோகத்தில் சென்றரைய வானவரும் ஆயர்பாடிபுக்கு கண்ணனை பின் தொடர்கின்றனர். சிதறி நின்ற ஆநிரை கண்ணனைச் சூழ்ந்து அவன் தன் இன்னிசையில் மனமீடுபட்டு நிற்கின்றன. பறவை யாவும் தத்தம் கூடுகள் துறந்து கண்ணன்முன் நிற்கும் தருக்களில் அமருகின்றன. இவைகளின் மிகுதியால் பாதபங்களும் கண்ணனை நோக்கித் தாழ்கின்றன. தரையணங்கைப் போர்த்துக் கிடக்கும் பசும் புற்களும் நிமிர்ந்து நின்று கண்ணன் குழல் கேட்டானந்திக்கின்றன. மதுவுண்டோர்போல் அங்குமிங்கும் அசைகின்றன. மான் கணங்கள் மருண்டு மேய்வதை மறந்து மேய்ந்த புல்லையும் தம் கடைவாய் வழி சோரவிட்டு சலிக்காச் சித்திரம்போல் சலனமற்று நிற்கின்றன. மரங்களும் மனமுருகி குழலினின்னிசையைப் பருகி மேனின்று மலர்களை வர்ஷித்து,வளர்ந்தகொம்புகளை தாழ்த்துகின்றன. என்னே!

"குழலிருண்டு சுருண்டேறிய குஞ்சிக் கோவிந்தனுடைய
கோமளவாயில்
குழல்முழஞ்சுகளினூடுகுமிழ்த்துக் கொழித்திழிந்த
வமுதப் புனல்.

(பெரியாழ்வார்.)

கீர்த்தனங்கள், இராகங்கள் இவைகளுக்கு உபயோகப்படுத்தியிருக்கும் அடையாளங்களின் விவரம்:—

1. ப = பல்லவி.
2. அ = அனுபல்லவி.
3. ச = சரணம்.
4. ～～～ = துரிதகாலத்தில் பாடவேண்டிய ஸ்வரங்கள்.
5. *—ஒவ்வொன்றும் ஒரு துரிதகாலமாத்திரை (காலஅளவு)
6. ஒவ்வொரு ஸ்வரத்திலும் கீழே புள்ளி போடப்பட்டிருந்தால் கீழ்ஸ்தாயி மேலே புள்ளி போடப்பட்டிருந்தால் மேல்ஸ்தாயி. புள்ளி போடாத ஸ்வங்கள் மத்திய ஸ்தாயி.

7. ○ = தாளத்தின் த்ருத அடையாளம்.
8. | = தாளத்தின் லகு அடையாளம்.
9. ⌒ = கமகம் அதாவது வளைவாகப்பாடுதல்.
10. சு = சுத்த ரிஷபம், சுத்தகாந்தாரம், சுத்தமத்திமம், சுத்த தைவதம், சுத்தநிஷாதம்.

ச = சதுர்ச்ருதி ரிஷபம், சதுர்ச்ருதி தைவதம்.
சா = சாதாரண காந்தாரம்.
பி = பிரதிமத்திமம்.
ஷ = ஷட்சுருதிரிஷபம், ஷட்சுருதி தைவதம்.
கை = கைசகிநிஷாதம்.
அ = அந்தரகாந்தாரம்.
கா = காகலிநிஷாதம்.

11. ஆ = ஆரோஹணம்.
அவ = அவரோஹணம்.

12. — இந்த அடையாளங்களை கீர்த்தனங்கள் ஸ்வரத்திற்கு கீழ் வரும்பொழுது முன் ஸாஹித்தியத்தின் அகார, இகார, உகாரங்களாகவும், இகார சஞ்சார ஸ்வரங்களில் வரும்பொழுது அந்த இடங்களில் ஸ்வரக்கோர்வைகளின் முடிவாகவும் பொருள் படுத்தவும்.

2; பெரியாழ்வார் பிரபந்தம்.

(முன் 392-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

75. அதுவலாற் சமயத்தோர்க ளவனருட் சமையந்தன்னை
யிதுவது வாகுமென்றே யெடுத்தெடுத் தியம்பா நிற்பர்
பொதுவென்பர் சிலர்களந்தப் பொய்மையைத் தெரிக்க மாட்டா
துதுபதர் மணிபோற் றோன்றி யுறையுமம் மணியோ டொத்தே

76. அன்றது காணவேண்டி லறைதரு வழிநே ராக்கி
நன்றுதி திரண்டுங் காணு நன்மையர் தன்மைபோல
வின்றுநாம் பரத்தின் மேன்மை யிதுவென வறியவேண்டி
லொன்றிய மறையோ ராதி யுறைத்தபல் சமையத்தோரும்.

77. வருகவென் றழைத்து நின்பொன் வாயிலிற் கிழியைத் தூக்கி
யருமறை முடிவில் வைகு மாதியம் பரமீதென்னப்
பொருவறு முறையால் வென்ற புண்ணியர் கொள்கவென்று
லொருவரே யறுப்பர் வேண்டா மெனினுமவ் வுண்மைகாட்ட.

78. ஆதலானினக்கு நின்சீ ரவனியோர் தமக்கு மன்னு
வோதுமிப் பரமீதென்ன வுணர்ந்ததை யடைதலாகு
மாதவத்தோரும் வாழ்வ ரென்றனன் மறைவ லாளன்
பூதலத் திறைவ னேலை புறையறு பூமி யெங்கும்.

79. ஒன்று கற்றோர்க ளாதி யோங்குநான் மறைபுமோதிச்
சென்றதின் முடிவு கண்ட சின்மயத் தோர்க ளந்தம்
பொன்றலின் முத்திநீதி புகலவல் லார்களெல்லா
நன்றிசேர் மதுரை நண்ணி நவிலுறுங் கடவுண் மேன்மை:

80. இதுவென வருளி யென்னை யிலங்குறுங் கடவுளார்த
மதுமலர்க் கமலபாத மன்னவைத் தென்னுற் கட்டும்
பொதுவுறு கிழியுங் கொண்டு புகழ்கொண்டு போவானின்றே
கதுமெனப் புதுவீரென்னும் வாசகங் கழறிவிட்டான்:

81. நாதுவர் கையினீதி தொடர்ந்தவா சகங்கொள்ளோலை
மாதிர மெட்டுமுட்ட மன்னவன் விடுத்தபின்னைப்
பூதல முழுதுங்காணும் பொற்கிழி பொருந்தச் சேர்த்துக்
கோதறு நெறியான் மன்னுங் கோமுனை வாயிறன்னில்.

82. கட்டினுன் தூதரோலை காசினியுள்ளோர்க்கெல்லா
மிட்டனர் தலத்துளோரும் யாவரு மறிந்தா ரன்றே
வட்டமா மேருவொத்த மணிமதின் மதுரை தன்னி
னுட்டெளி வுடையா ரெல்லாந் தூதுவ ருடனே சென்றார்.

வேறு

83. சித்தர் புகுந்தார் தேவர் மகிழ்ந்தா
ரத்திரம் வாழ்வெனு மந்தணர் வந்தார்
புத்த ரடைந்தார் சைவர் புகுந்தார்
மத்தமுறும்மீ மாங்கிசர் வந்தார்.

84. மாயா வாதியர் வந்து புகுந்தா
ரோயா தேமது வுண்டு தமைத்தா
ஞயா வாமிக ளக்கணம் வந்தார்
தேயா வஞ்சவை சேடியர் சென்றார்.

85. ஆசறு சாங்கிய யோக ரணைந்தார்
பாசுப தத்தவ ரும்பதி யுற்றார்
மாசில ஞமெனு மாவிர தத்தார்
தேசு பெறும்படி கூடல் செறிந்தார்.

வேறு.

86. ஆருயிர் கொல்லோ மென்னு மருகரு மதுரை சார்ந்தார்
தேருமெய் யன்பில்காளா முகவருஞ் சென்றுசோர்ந்தார்
பாருறு மின்ப மல்லாற் பயெனல் பழுதா மென்றே
யோருல காயதத்தோ ரெனுமவ ருடனே சென்றார்.

87. நல்லியற் கூடறன்னி லிவரிவர் நண்ணு நாளில்
வில்லிபுத் தூரின் மாயன் விட்டுணு சித்த னென்பா
னெல்லியம் பொழுதிற் றுஞ்சு மிடத்தினி லொருநாளெய்தி
யல்லியங் கண்ணு னேக்கி யருளளித் தன்பன் மாட்டில்

88. இருந்தவர் திருப்பேர் சொல்லி யெழுப்பினா ரெழுப்புங்காலை
யருந்தவ முடையார் துண்ணென் றெழுந்திருந் தருகினோக்கக்
கருந்தட முகில்போன் மேனிக் கருணையங் கடலைக்கண்டார்
குருந்துறைந் தவனே போற்றி யெனக்குழைந் தடியில்
வீழ்ந்தார்.

வேறு.

89. வையமுழு துண்டவர் பதங்களில் வணங்கி
நைவுறு மனத்தின ரெழுந்து நவையில்லாங்
கைதலை குவித்தெழில்கொள் கண்கள் புனல்சிந்தச்
செய்திற மறந்துருகு சிந்தையரு நின்றார்.

90. நின்றநெறி யன்பனிலை கண்டு நிகரில்லா
வொன்றுளது கேளென வுகந்திறை யுரைப்ப
மன்றல்கம ழுந்துளப மாலைபுனை மார்பா
வின்றறியும் வண்ணம தியம்பிடுக வென்றான்.

வேறு.

91. நன்னெறி மதுரை தன்னின் னாற்பெருந் திசையுங் காணத்
தென்னவன் விகாரத்தாலே திரண்ட பொற்கிழி யொன்றாக்கி
மின்னவிர் முடியான் றன்சீர் விளங்கிய வாசறன்னின்
முன்னுறத் தூக்கி வைத்தான் முகுந்தனார் மதலாய் நீபோய்.

92 அறுத்திவண் கொணர்வாயென்ன வச்சுதனருளிச் செய்ய
வெறுப்புடன் விருப்பொன்றில்லா விட்டுணுசித்தன் கூறுங்
கறுத்த மாமுகிலே வாதில் வென்றவர் கைக்கொளென்றே
நிறுத்தினான் மன்னன் வாய்மை நீணில மதனிற் றொண்டன்.

93. எதுரைத் தறுப்பே னெந்தா யிநகையா லெடுத்து வெட்டு
நீதிமண் வெட்டிக் கோட்டா னிறை பெருந்தழும்பைக்காட்டி
வேதநிச் சயங்காட்டாதே விமலனே யறுக்க லாமோ
பூதலமாளு மன்னன் பொறுப்பனோ புகல்வா யென்றான்.

94. அன்பரிவ்வாறு கூற வச்சுதனவரை நோக்கித்
துன்பிலா மன்னன் கேட்ட சுருதியின் முடிவைக் காட்ட
லென்பரம் வாயிறன்னி லிலங்கு பொற்கிழி கைக்கொள்ள
லுன்பரமேகா யென்றாங் குரைத்திட வுரைப்பர் தொண்டர்.

95. பூதல முழுதிலுள்ள புலவர்கள் சபையி னுள்ளே
மாதிரம் பொருந்து திண்டோண் மன்னவர் மன்னன் முன்னே
யோதுமோரெழுத்தும் போகா வூக்கையே னுடலந்தாங்கி
நாதனே வெட்கமின்றி நண்ணுத னலனோ வென்றார்.

96. என்றிவா றறையக் கேட்டங் கிறை பெருமுறுவல் செய்து
நன்றிகொள் வேதநான்கு நவிலுஞ் சாத்திரமோ ராறு
மின்றென துடைமையாகு மென்னை.நீ யுடைமை யானு
லொன்றுனக்கரிய துண்டோ வுத்தம குணத்தினானே.

97. என்னமின் னவிருநேமி யெம்பிரா னருளிச்செய்யப்
பொன்னடித் தலத்தில் வீழ்ந்து புண்ணியக் கொழுந்தே யன்னார்
தென்னவன் மதுரைதன்னிற் றிருமகனாக வின்றே
மன்னுவான் விடைகொள்கின்றேன் வாழியென்றெழுந்து வாழ்த்தி

98. நின்றவர் தம்மை யேகு நீ யென வனுப்பித் தாமுஞ்
சென்றுதங் கோயில் சேர்ந்தார் திருமறு மார்பரன்று
நன்றிகொள் பெரியாழ்வாரு நற்றவத் தோர் கடாங்கப்
பொன்றிகழ் சிவிகையேறிப் பூபதி கூடனோக்கி.

99. எகினான்பர் சூழ விமையவர் வணங்கி வாழ்த்த
மாகமீதிலங்குஞ்சோதி மதிக்குடை நிழற்றச் சீர்கொள்
பூநமார் மருதவேலிப் புதுவைமாநகர நீங்கிப்
மேகமே காவா யென்று விழிவழி யருவி சோர.

வேறு

100. கற்குழைய மரங்குழையக் கானில்வளர் விலங்கினத்தின்
விற்குழையப் பறவைகளின் மெய்குழைய மேதினியிற்
புற்குழைய வேதாந்தப் பொருள்குழைய மெஞ்ஞானச்
சொற்குழைய வேகுமவர் துலங்குவனம் பலகடந்தே.

வேறு.

101. சென்றனர் மதுரை நோக்கித் தென்றிசை வாயில் சேர்ந்தங்
கன்றதிலுறையுங்கூட லழகிய பெருமாடன்னை
யொன்றிய மனத்தராகி வணங்கினா ரோவா தன்பா
னின்றிருந் தவரை நோக்கி நிலவுசித் திரம தானார்.

[தொடரும்.]

உ

கஜபதிசிங் அல்லது

மேனாட்டுத் துப்பறிபவன்.

K. சங்கரநாராயணன்

(388-ம் பக்கம் தொடர்ச்சி.)

சாரதா;— மாகதக்கிரீடத்துக்கு வேறு திருடனால் நேர்ந்த ஆபத்தைத் தடுப்பதற்காகவே ரங்கசாமி முயற்சி செய்திருக்க வேண்டும். அவனுடைய காலடிச் சத்தத்தைக் கேட்டதும் திருடன் மூன்று மாகதங்களைக் கொள்ளையடித்தபிறகு கிரீடத்தைக்கீழே போட்டுவிட்டு ஓடியிருக்கலாம். ரங்கசாமி அதை யெடுத்து பார்த்துக்கொண்டிருக்கலாம். எப்படியானாலும் அவன் நிரபராதியென்பதை நான் உறுதியாகக் கூறுவேன். இதற்கு மேல் ஒன்றுங்கூற முடியாது. எனதருமை ரங்கசாமி சிறையிற் கிடந்துழலுவது என் ஹிருதயத்தைத் துன்புறுத்துகின்றது.

"ரங்கசாமியின்மீது நீ வைத்திருக்கும் அளவிலாப் பிரியத்தினால் அவனுடைய குற்றம் உனது நேத்திரங்களுக்கும் புலப்படுகின்றதில்லை. இந்த மாயத் திருட்டைக் கண்டுபிடிக்கவேண்டுமென்ற கருத்துடன் இவ்விருகனவான்களையும் அழைத்து வந்திருக்கின்றேன் (கஜபதிசிங்கைச் சுட்டிக்காட்டி) இவர்தான் கஜபதிசிங் மேனாட்டுத் துப்பறியும் நிபுணர். இவரை இதற்குமுன் நேரில் நீபார்த்திராவிட்டாலும், தினசரி மூலமாய் இவரது பெயரை இதற்குமுன் நீ அறிந்திருப்பரயென்றே நினைக்கிறேன். இவரை சென்னை மாகாணம் மட்டுமல்ல வங்காளமும் (See Lalitha Bank in the "Bala Vidya" Vol. I No. X), பம்பாயும் (See Kamala Kantha which is to be shortly published) இவர் பெயரைப் போற்றிவருகின்றன. இவருக்கு பக்கத்திலிருப்பவர் இவரு

டைய சீடர். வேணுவென்று நாமதேயம் படைத்தவர். இவ்விருவரும் என்னை ஒருபொருட்டாக நினைத்து வந்திருக்கின்றனர்." என்று கூறி நாராயணசாமி நாயுடு கஜபதிசிங்கையும் வேணுவையும் அறிமுகப்படுத்தினர்.

சாரதா:— கூடத்துக்குள் நுழையும் பொழுது உங்கள்கூட கஜபதிசிங்கைக் காணேமே?

நாராயணசாமிநாயுடு:— குதிரைலாயம்வரைச் சென்றிருந்தார். அவர் வரும்வரை வெளியில் நின்றுகொண்டிருக்கக் கூடாதென்று எங்களுக்கு அவர் கண்டிப்பான உத்தரவு கொடுத்திருந்தமையால், அவருக்காக காத்திருக்காமல் நாங்கள் இங்கு வந்துவிட்டோம்.

சாரதா:— (திடுக்கிட்டு) குதிரைலாயத்துக்கா! குதிரைலாயத்தில் அவருக்கு என்ன துப்புக்கிடைக்கும் (கஜபதிசிங்கைப்பார்த்து) ஐயா! எப்படியாவது ரெங்கசாமி குற்றவாளியல்லவென்று ருசுப்படுத்தினுல் போதும். உங்களுக்கு என்னுயுளளவும் நன்றியறிவுள்ளவளாக இருப்பேன்.

கஜபதிசிங்:— குதிரைலாயத்தில், சாரதா! நீ கூறுவதைப் போல் என்ன இருக்கப்போகின்றது. நீ மனதுவைத்தால் உண்மைக் குற்றவாளியை நான் கண்டுபிடிப்பதற்கு அனுகூலமாகவிருக்கும். உன்னிடம் ஒன்றிரண்டு கேள்விகள் கேட்க விரும்புகின்றேன்.

சாரதா:— ரங்கசாமியை எனதருமை நண்பனை சிறையினின்றும் விடுவிப்பதற்கு நான் என்ன தியாகம் வேண்டுமென்றாலுஞ் செய்வேன்.

கஜபதிசிங்;— நீ ஒருவிதச்சத்தத்தையும் நேற்றிரவு கேட்கவில்லையா?

சாரதா;— எனது மாமாவும் ரங்கசாமியும் கூக்குரலுடன் உரையாடுவதற்குமுன் ஒருவித சத்தத்தையும் நான் கேட்கவில்லை.

அயர்ந்து துயின்று கொண்டிருந்த என்னை எனது மாமாவின் உரத்த குரலே எழுப்பிற்று. உடனே அவ்விருவர்களும் நின்றுகொண்டிருக்கும் இடத்திற்குச் சென்றேன்.

கஜபதிசிங்:— நேற்றிரவு எல்லாக் கதவுகளையும் ஜன்னல்களையும் நீ தான் அடைத்திருக்கின்றாய். ஆனல் ஜன்னல் ஒன்ருவது தவறுதலாக திறந்துவைக்கப்பட்டிருக்கவில்லையே?

சாரதா:— இல்லை. வீட்டினுள் மனிதர் நுழைவதற்கு இடமேகிடையாது.

கஜபதிசிங்:— இன்று காலையிலும் அவைகள் நீ அடைத்திருந்தபடியே காணப்பட்டனவா?

சாரதா:— ஆம்,

கஜபதிசிங்:— கோமளமென்ருெரு வேலைக்காரி உனக்கிருக்கின்றுளல்லவா? அவளுக்கொரு காதலனிருக்கின்றான். அவனை நேற்றிரவு காண்பதற்காக வெளியே சென்றுள். இவ்விஷயத்தை உனது மாமாவிடங் கூறியிருக்கின்றுயல்லவா?

சாரதா:— ஆமாம். மேலும் கோமளத்துக்கு எங்கள் வீட்டில் நேற்றிரவு மரகதக் கிரீடம் இருக்கப்போகின்ற விஷயம் தெரிய வரும். நாங்கள் (நாயுடு, சாரதா, ரங்கசாமி) அதைப்பற்றி நேற்றிரவு சம்பாஷித்துக்கொண்டிருந்த தருணம் கோமளம் ஒளிந்திருந்து கேட்டுக்கொண்டிருந்தாள்.

கஜபதிசிங்:— அறிந்துகொண்டேன். உனது மாமா மரகதக்கிரீடத்தைப்பற்றி உரையாடிக்கொண்டிருந்ததைஒளிந்துகேட்டபிறகு, அதைக் கொள்ளையடிக்க எண்ணங்கொண்டு தன்னுடைய ஆசைக் காதலனிடங் கூறுவதற்காக இரவில் வெளியிற் சென்றிருக்கலாம்.

நாராயணசாமிநாயுடு:— காரியமில்லாத விஷயங்களைப்பற்றி பேசுவதில் என்ன பயன்? ரங்கசாமியைக் களவுங்கையுமாய்ப் பிடித்திருக்கையில் மற்றொரு திருடனைப்பற்றி பேசுவானேன். மாகதங்கள் இப்பொழுது எங்கிருக்கின்றன வென்பதைக் கண்டுபிடிப்பது நமது முக்கியக் கடமை.

வேணு:— நாயுடுவே! பதறுகிறீர்கள், கஜபதிசிங்கின் துப்பறியும் வினோதம் உங்களுக்குத் தெரியாது.

கஜபதிசிங்:— நாயுடு அவர்களே! உங்களுடைய அபிப்பிராயத்துக்கு வந்துவிட்டோம். சாரதா! கோமளம் வெளியே சென்ற பிறகு நீ என்ன செய்துகொண்டிருந்தாய்.

சாரதா:— பின்புறக்கதவைத் திறந்துகொண்டு அவள் வெளியே சென்றதை நான் பார்த்தேன்: அப்பொழுது எனக்கு சந்தேகமுண்டாகவில்லை. 15 நிமிடங்கள்வரை கோமளம் திரும்பி வந்துவிடுவாளென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தும் அவள் வராமையால் பின்புறக் கதவை அடைக்கச் சென்றேன். கதவை அடைக்குமுன் கோமளம் பதறியடித்துக்கொண்டு உள்ளே நுழைந்தாள். அப்பொழுது ஜன்னலின் வழியாக நான் வெளியே நோக்கினேன். இருண்ட தோட்டத்தின் மத்தியில், கிணற்றினருகில் கோமளத்தின் காதலன் நின்றுகொண்டிருப்பதையும் நான் பார்த்தேன்.

கஜபதிசிங்;— அவ்வாறானால் அம்மனிதன் உனக்கு அறிமுகமானவனா?

சாரதா:— அவன்பெயர் சொக்கலிங்கமாம் ரயில்வேயில் அவனுக்குக் சம்பளமாம்.

கஜபதிசிங்:— பின்புறக் கதவின் இடது பக்கத்தில், அதாவது அப்பாதையின் நடுவில் அவன் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்தாய்.

சாரதா:— ஆம்.

கஜபதிசிங்:— அம்மணி தனுக்கு இருகால்களுங்கிடையாது ஒரு காலுக்குப்பதிலாக மரக்காலை (Wooden Leg) உபயோகித்துக் கொண்டிருக்கிறான்.

கஜபதிசிங்கின் இம்மொழிகளைக் கேட்டதும் அம்மாது கலவரத்துடன் திகிலடைந்தாள். "கஜபதிசிங்! நீங்கள் ஒரு மாந்திரவாதியே! அவனுக்கு செயற்கை காலுண்டென்பதை எங்ஙனம் அறிந்துகொண்டீர்கள்?" என்று அவள் வினவினாள். அவளது வினவுக்கு விடையளிக்க மனமில்லாத கஜபதிசிங், இப்பொழுது நான் மாடிக்குச் செல்லவிரும்புகின்றேன். திரும்பவும் ஒருக்கால் வீட்டைச்சுற்றி நான் சோதனை செய்யச்சென்றாலும் செல்வேன். உனது அறை ஜன்னலைப் பார்வையிட அநேகமாய் உனதறைக்குச் செல்வேன்." என்றுகூறினதும் சாரதா பெருமூச்சுவிட்டாள் அதன் பொருளென்ன?

முதலாவதாக கஜபதிசிங் சாரதாவின் அறை ஜன்னலைச் சோதனை செய்தார். பூதக்கண்ணாடியால் (Magnifying lense) நன்றாகக் கூர்ந்து கவனித்தார். பிறகு மாடியை நோக்கி ஏறினார். வேணுவும், நாயுடுவும், சாரதாவும் துப்பறிபவரைப் பின்பற்றிச் சென்றனர். மாடியிலுள்ள நாயுடுவின் படுக்கையறையையடைந்து மாகதக்கிரீடம் வைத்திருக்கும் பெட்டியின் பூட்டை உற்றுநோக்கினார்.

கஜபதிசிங்:— எந்த சாவியால் இப்பெட்டி திறக்கப்பட்டது?

நாராயணசாமி நாயுடு:— எனது மனைவியின் பெட்டிசாவியைக்கொண்டு ரங்கசாமி இதைத் திறந்திருக்கின்றான்.

கஜபதிசிங்:— அந்தச்சாவியைப் பார்ப்போம் என்றதும், நாயுடு மேஜைமீதிருந்த ஓர் சாவியை கஜபதிசிங்கிடமளித்தார். அதைப் பெற்றுக்கொண்டு துப்பர் இரும்புப் பெட்டியைத் திறந்தார். ஒருவித ஓசையின்றி பெட்டி திறக்கப்பட்டது.

கஜபதிசிங்:— சத்தம் போடாத பூட்டு இது. ஆகையினுல் பெட்டியைத் திறக்கும் பொழுது நீங்கள் ஒருவிதச் சத்தத்தையுங் கேட்கவில்லை. (இரும்புப் பெட்டியிலிருந்து ஒருவித தந்தப் பெட்டியையெடுத்து அதிலுள்ள மரகதக்கிரீடத்தை வெளியிலெடுத்து) இம்மரகதக் கிரீடத்தை நான் பார்வையிடட்டும் என்ருர்.

மரகதக்கிரீடத்தைப் பார்த்த துப்பறிபவர்களிருவரும் ஆச்சரியங்கொண்டனர். கஜபதிசிங் அதைப்பன் முறைப்பிரட்டிப்பார்த்துவிட்டு, "நேர்த்தியாய் சித்திரவேலை செய்யப்பட்டுள்ள அருமையானபொருள் இது. இக்கிரீடத்தைப் போன்று இதுவரை நான் ஒரு கிரீடத்தையும் பார்த்தது கிடையாது. மரகதங்களின்விலைமதிப்பிட முடியாதவைகளாய் இருக்கின்றன. கிரீடத்தின் களவாடப்பட்டிருக்கும் பாகம் (மூன்று மரகதங்களும்) சுமார் லட்சப் ரூபாய் மதிப்புள்ளதாகவிருக்குமென்று நினைக்கின்றேன்." என்று கூறினுர்.

நாராயணசாமி நாயுடு அவர்களே! களவாடப்பட்டிருக்கும் மூலையைப்போன்ற மற்றெரு மூலையைக் கையினுல் பிளப்பதற்கு உமக்கு சக்தியிருக்கின்றதா பார்ப்போம்." என்று கஜபதிசிங் மொழிந்ததும் நாயுடு திகிலினுல் பிரமை பிடித்தவர் போன்று நின்ருர். "அவ்வாறு செய்ய நான் கனவிலும் கருதேன்" என்று நாயுடு பதிலளித்தார். 'அப்படியானுல் நான் முயற்சி செய்கிறேன்." என்றுகூறி, கஜபதிசிங், தன்னுடைய முழுபலத்தையும் உபயோகித்து மரகதக்கிரீடத்தின் ஓர் மூலையைக் கரத்தினுல் ஒடிப்பதற்கு முயன்ருர். ஆனுல் அவரது முயற்சி வீணுயிற்று.

கஜபதிசிங்;— கொஞ்சங்கூட இடங்கொடுப்பதாகக் காணும். எனது புஜங்கள் விசேஷபலம் பெற்றிருப்பினும் என்னுயுளளவும் முயற்சி செய்து பார்த்தாலும் இக்கிரீடத்தைப் பிளப்பதற்கு முடியாது. சாதாரண மனிதன் ஒருபொழுதும் வெற்றி பெருன். நாயுடு அவர்களே! எனது முயற்சியே வெற்றிபெற்றதென வைத்துக்கொள்வோம். கிரீடத்தைப் பிளக்கும் பொழுது என்ன ஓசை உண்டாகுந் தெரியுமா? துப்பாக்கி வெடியோசையைப் போன்ற சத்தங்கேட்கும். உமது படுக்கையறையிலிருந்து சுமார் ஐம்பது கெஜ தூரத்திற்கப்பால் இக்களவு நடந்திருக்கின்றது. ஆகையால் வெடியின் சத்தத்தைப்போன்ற ஓசையை நீங்கள் கேட்டிருக்கலாம். ஆனுல் ஒருவிதச் சத்தமுங் கேட்கவில்லையென்று நீங்கள் கூறுகின்றீர்கள்.

[தொடரும்.]